## *Indian Orphanages*

*190. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that grants sanctioned to the inmates of Indian Orphanages of (i) Harijans, (ii) Non-Harijans and (iii) Anglo-Indians vary from each other ; and

(*b*) if so, the details and the reasons therefor ?

## இந்திய அனாதை விடுதிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (1) அரிசனங்கள், (2) அரிசனங்களல்லாதார், (3) ஆங்கிலோ-இந்தியர் வகுப்புக்களைச் சேர்ந்தவர்களுக்காக உள்ள இந்திய அனாதை விடுதிகளிலுள்ள குழந்தைகட்கு வழங்கப்படும் மானியங்கள் விடுதிக்கு விடுதி வேறுபடுகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரமென்ன ? அவற்றுக்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) அரிசனங்கள், அரிசனங்கள் அல்லாதவர்களுக்காக சமவெளி அனாதை இல்லங்களில் தங்கியிருப்பவர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 12, மலைவாழ் இடங்களிலுள்ள அனாதை இல்லங்களில் தங்கியிருப்பவர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 18 அல்லது நிகர உணவுச் செலவில் ¾ பாகம் இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்த விதத்தி உணவு மானியம் வழங்கப்படுகிறது. அத்தகைய மானியம் பெறத் தகுதியுள்ளவர்களின் பெற்றோரது வருமானம் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்த அளவு ரூ. 300-க்கு மேற்படக் கூடாது. சென்னை மாநகரில், அனாதை இல்லங்களில் தங்கியுள்ள ஆங்கிலோ இந்தியர்களைப் பொறுத்தமட்டில், ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 என்ற விதத்தில் உணவு மானியம் வழங்கப்படுகிறது. பெற்றோர் அல்லது காப்புப் பொறுப்பாளரது வருமானம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 200-க்குக் குறைவாக இருக்க வேண்டும். மேற்சொன்ன வருமான வரையறையில் காணப்படும் வேறுபாடு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. இந்திய, ஆங்கிலோ-இந்தியச் சிறார்களின் வாழ்க்கைத் தரத்தில் காணப்படும் வேறுபாடே உணவுமானியம் வழங்கப்படுவதில் காணப்படும் வேறுபாட்டிற்குக் காரணம் எனக் கூறலாம்.

*1972 ஆகஸ்ட் 22]*

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, அனாதை விடுதிகள் என்பது அனாதைக் குழந்தைகள் இருக்கும் இடம். இதில் சாதி வேறுபாடு அல்லது இன வேறுபாடுகள் இருப்பதற்கு இடமில்லை. ஆனாலும் அதிலே ஆங்கிலோ-இந்தியக் குழந்தைகளுக்கு ரூ. 35 என்றும் அரிசனக் குழந்தைகளுக்கு ரூ. 20 என்றும் மற்றக் குழந்தைகளுக்கு ரூ. 12 என்றும் கொடுக்கப்படுவதாக அறிகிறேன். இப்படிப்பட்ட வேறுபாடு இருக்க வேண்டியது அவசியம்தானா? எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே அடிப்படையில் கொடுக்கப்படுவது நல்லதல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, ஆங்கிலோ-இந்தியக் குழந்தைகளுக்குத்தான் சற்று அதிகமாகக் கொடுக்கிறோம். மலையிலுள்ள குழந்தைகளுக்குக் குளிரைத் தாங்குவதற்கான துணிமணிகள் கொடுக்க வேண்டியிருப்பதால், அவர்களுக்கும் சற்று அதிகமாகக் கொடுக்கிறோம். ஆக ஆங்கிலோ-இந்தியக் குழந்தைகளுக்கு 20 ரூபாய் என்றும் மலைவாழ் குழந்தைகளுக்கு ரூபாய் 18 என்றும் மற்றவர்களுக்கு 12 ரூபாய் என்றும் கொடுக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சென்னையில் இப்படி நடத்தப்படும் விடுதி ஒன்றில்கூட சாதாரண அரிசன் அல்லாதவர்களுக்கு 12 ரூபாயும் அரிசனக் குழந்தைகளுக்கு 20 ரூபாயும், ஆங்கிலோ-இந்தியக் குழந்தைகளுக்கு 35 ரூபாயும் கொடுக்கப்படுவதாக அறிகிறேன். இது உண்மையானால், அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரேமாதிரியாகக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் தகவல் புதிதாக இருக்கிறது. எந்த விடுதியில் இப்படிக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், பரிசிலனை செய்யலாம். ஆனால் பொதுவாக மலை வாழ்பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு சற்று அதிகமாகத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. காரணம் மலையில் இருப்பதால், கூடுதலான துணிமணிகள் எல்லாம் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. அது போன்றுதான் ஆங்கிலோ-இந்தியர்கள் விஷயத்திலும் சற்றுக் கூடுதலாகத் துணிமணிகள் கொடுக்கப்பட வேண்டியிருப்பதால், அவர்கள் விஷயத்திலும் இந்தத் தொகை உயர்த்திக்கொடுக்கப்படுகிறது. நிதிவசதி இருக்குமானால், அனைவருக்குமே அதிகமாகத் தரலாம்.